# பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்டில் புகைப்பட கண்காட்சி

கருத்தைப் பதிவு செய்ய Like Share Tweet Share

Colors:

பதிவு செய்த நாள்
28 செப் 2019 02:04

புதுச்சேரி: புதுச்சேரி பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்டில் புகைப்பட கண்காட்சி நேற்று துவங்கியது.உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, புதுச்சேரியின் பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில், புதுச்சேரி பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்டிலும், முருங்கப்பாக்கத்தில் உள்ள கலை மற்றும் கைவினை கிராமத்திலும் புகைப்பட கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.கண்காட்சியின் துவக்க விழா, பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்டில் நேற்று காலை நடந்தது. சுற்றுலாத் துறை செயலர் பூர்வா கார்க், கண்காட்சியை துவக்கி வைத்தார். முதல்வரின் பார்லிமெண்ட் செயலர் லட்சுமிநாராயணன் எம்.எல்.ஏ., துணை பிரெஞ்ச் கான்சல் கரோல் ஜோஸ்சி, புதுச்சேரி பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்டின் இயக்குனர் பிரடெரிக் லேண்டி, சுற்றுலாத் துறை மேலாளர் சிதம்பரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.கடந்த காலத்தில் புதுச்சேரி, தற்போதைய புதுச்சேரி, பறவையின் பார்வை கோணத்தில் வானில் இருந்து எடுக்கப்பட்ட புதுச்சேரியின் முக்கிய இடங்கள் குறித்த போட்டோக்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. நாளை (29ம் தேதி) வரை கண்காட்சி நடக்கிறது. அனுமதி இலவசம்.

Advertisement



6 வயது சிறுவன் இளவரசனின் கல்லீரல் மாற்று அறு சிகிச்சைக்காக உதவுங்கள்
EDUDHARMA

Advertisement

**மேலும் புதுச்சேரி செய்திகள் :**

### முக்கிய செய்திகள்

1. என்.ஆர்.காங்., சமரச முயற்சி:
2.வேட்பாளர்கள் இன்று அறிவிப்பு? எதிர்பார்ப்பு! அமாவாசை என்பதால் கட்சிகள் தீவிரம்
3. குழந்தைகளுக்கு தாய்ப்பால் அவசியம், 'போஷன் மா' நிகழ்ச்சியில் ஆலோசனை
4. பைக்குகளில் சக்கரம் திருடிய ரவுடி கைது; இருவருக்கு வலை
5. விநாயகருக்கு 108 சங்காபிேஷகம்

சினிமா | வர்த்தகம் | விளையாட்டு | புத்தகங்கள் | உலக தமிழர் செய்திகள் | Advertisement Tariff | வாசகர் கடிதம் | International Edition | Dinamalar Publications

Copyright © 2019 Dinamalar - No.1 Tamil website in the world. Designed and Hosted by Web Division,Dinamalar. | Contact us